செ.வெ.எண்: 651 நாள்: 08.11.2020

**காவிரி-வைகை- குண்டாறு இணைப்புத் திட்டத்தால் விவசாயம் செழித்து நிலத்தடி நீர்மட்டம் உயரும்.**

**விராலிமலை சட்டமன்ற தொகுதியில் எண்ணற்ற வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.**

**மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தகவல்.**

---

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (08.11.2020) புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை மற்றும் இலுப்பூர் வட்டாட்சியர் அலுவலகங்களில் அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கினார். இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

பின்னர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் முன்னேற்றத்திற்காக எண்ணற்ற நலத்திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் விராலிமலை சட்டமன்ற தொகுதியில் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் ஒரு பகுதியாக விராலிமலை முருகன் கோவிலுக்கு ரூ.3.80 கோடி மதிப்பீட்டில் மலைப்பாதை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதனால் பக்தர்கள் எவ்வித சிரமமும் இன்றி லிப்ட் மூலம் செல்ல முடியும். இதன் பணிகளை விரைவாக முடிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

விராலிமலை சட்டமன்ற தொகுதியில் உள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் பலகட்ட கொரோனா நிவாரணப் பொருட்கள் முழுமையாக வழங்கப்பட்டுள்ளது. இதே போன்று கஜா புயலின் போதும் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. விராலிமலையில் வட்டாட்சியர் அலுவலகம் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளது. விராலிமலை பகுதியில் பல்வேறு தொழில் நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு

வழங்கப்பட்டுள்ளது. விராலிமலையில் கின்னஸ் சாதனை ஜல்லிக்கட்டு போட்டி நடத்தப்பட்டுள்ளதுடன் இதனை உணர்த்தும் வகையில் ஜல்லிக்கட்டு காளையை வீரர் அடக்கும் சிலை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பொது மக்களின் பல்வேறு கோரிக்கைகள் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருவதுடன் பிற கோரிக்கைகளும் நிறைவேற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். பொது மக்களுக்கு விலையில்லா வீட்டுமனைப்பட்டா, முதியோர் உதவித்தொகை போன்ற பல்வேறு நலத்திட்ட உதவிகள் தொடர்ந்து வழங்கப்படும். தீபாவளி பண்டிகை முடிந்தவுடன் நமது பகுதிகளில் உள்ள கிராமப்புறங்களில் கண்பரிசோதனை முகாம் நடத்தப்பட்டு தேவைப்படும் நபர்களுக்கு கண்கண்ணாடி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

புதுக்கோட்டை மாவட்ட மக்களின் பல ஆண்டுகால கோரிக்கையினை ஏற்று காவிரி-வைகை-குண்டாறு இணைப்புத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தின் முதற்கட்ட பணிகளுக்கு ரூ.700 கோடி நிதிஒதுக்கீடு செய்து முதற்கட்ட பணிகள் நடைபெற்று வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இத்திட்டத்திற்கு ஜனவரி மாதம் அடிக்கல் நாட்ட புதுக்கோட்டை மாவட்டத்திற்கு வருகை தருவதாக தெரிவித்துள்ளார். இத்திட்டம் நிறைவேற்றப்படும் பொழுது புதுக்கோட்டை மாவட்டம் விவசாயத்தில் செழித்து சிறப்பான மாவட்டமாக மாறுவதுடன், நிலத்தடி நீர் மட்டம் உயரும்.

உலகின் பல்வேறு நாடுகளில் கொரோனா பாதிப்பின் காரணமாக 2ம் கட்ட ஊரடங்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இதே போன்று தமிழகத்தின் அண்டை மாநிலங்களிலும் கொரோனா பாதிப்பு அதிகரித்துள்ளது. இந்நிலையில் தமிழக அரசு மேற்கொண்ட சிறப்பான நோய் தடுப்பு நடவடிக்கையின் பயனாக தமிழகத்தில் கொரோனா தாக்கம் குறைந்துள்ளது. மருத்துவர்கள், செவிலியர்கள் உள்ளிட்ட பல்வேறு நபர்களின் சிறப்பான செயல்பாட்டால் இந்நிலை ஏற்பட்டுள்ளது. அவர்களுக்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே பொது மக்கள் அனைவரும் கட்டாயம் முகக்கவசம் அணிவதுடன் கொரோனா பாதுகாப்பு வழிமுறைகளை அனைவரும் தவறாது பின்பற்ற வேண்டும். இவ்வாறு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

பின்னர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் விராலிமலை வட்டாட்சியர் அலுவலகத்தில் வருவாய்த்துறையின் சார்பில் 76 பயனாளிகளுக்கு ரூ.14.05 லட்சம் மதிப்பீட்டில் விலையில்லா வீட்டுமனைப் பட்டா, முதியோர் உதவித்தொகை, மாற்றுத்திறனாளி உதவித்தொகை உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளையும், இலுப்பூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் வருவாய்த்துறையின் சார்பில் 87 பயனாளிகளுக்கு ரூ.23.37 லட்சம் மதிப்பீட்டில் விலையில்லா வீட்டுமனைப் பட்டாக்களுக்கான ஆணைகள் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

மேலும் இலுப்பூர் பேரூராட்சி, பாப்பான்குடியில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி மற்றும் பொதுநிதி திட்டத்தின் கீழ் ரூ.60 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட 1 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியினை திறந்து வைத்தார். இதன் பயனாக பாப்பான்குடி, ஓலைமான்பட்டி, மாத்திரான்பட்டி, சௌராஷ்ட்ரா தெரு போன்ற பகுதிகளில் உள்ள சுமார் 2,850 பொதுமக்கள் பயன்பெறுவார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத் தலைவர் எஸ்.பழனியாண்டி, மாவட்ட வருவாய் அலுவலர் பெ.வே.சரவணன், வருவாய் கோட்டாட்சியர் டெய்சிகுமார், இலுப்பூர் பேரூராட்சி செயல் அலுவலர் ஆஷாராணி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை**